சுத்தமல்லி ஊராட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திருமதி பா.மேனகா

ந.க.எண் பொருள்: 004 / 2024-25 நாள்: 10.08.2024

குடியிருப்பு மனைப்பிரிவு திருநெல்வேலி மாவட்டம். மானூர் ஊராட்சி ஒன்றியம், சுத்தமல்லி ஊராட்சி

அனுமதி மற்றும் DTCP தொழில் நுட்ப ஒப்புதல் ம/வ/திஉதிகு..எண்: SWP/21/2024 மற்றும் வரைபடங்களுக்கு ம/வ/தி.மா.அ.எண் SWP/27/2024 இறுதி ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக

பார்வை:

1) அரசாணை (நிலை) எண் 71 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 16.08.2004.

2) அரசாணை (நிலை) எண் 255 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை 18.08.1997.

3) இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொறுப்பு) திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடித ந.க.எண்: C475R34V/2024/TCP நாள்-01/04/2024.

4) ஊராட்சி தீர்மான எண்: 285 / 12.06.2024

உத்திரவு,

திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியம், சுத்தமல்லி ஊராட்சி சர்வே எண்: 31/1,32/1,34/1D-ல் 12450.00 சதுரமீட்டர் (3.08 ஏக்கர்) பரப்பளவில் அமையவுள்ள 60 குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உறுப்பினர் செயலர் (பொறுப்பு) திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ம/வ/தி.மா.அ.எண். மனைப்பிரிவு எண் SWP/21/2024 என்ற எண்ணில் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் வரைபடங்களுக்கு ம/வ/தி.மா.அ.எண்: SWP/27/2024 என்ற எண்ணில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவு 12450.00 சதுர மீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. இதில் 60 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இம்மனைப்பிரிவில் உள்ள 3941.21 சதுர மீட்டர் பரப்பளவுள்ள சாலைகள் மற்றும் மூலை முடுக்குகள், 858.85 சதுர மீட்டர் பரப்பளவுள்ள பூங்கா, 49.06 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் மின்வாரியத்திற்கும் 51.73 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் பொது உபயோகத்திற்கும், ஊராட்சிக்கு தானபத்திரப் பதிவு எண். 1093/2024 & 1094/2024 நாள்- 05/03/2024 -ன் மூலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனை பிரிவிற்கு கீழ்கண்ட விவரப்படி மனை பிரிவு உரிமையாளரால் கட்டணங்கள் செலுத்தப் பட்டுள்ளது.

சுத்தமல்லி ஊராட்சிக்கு Layout கட்டணமாக 12450.00 சதுர மீட்டருக்கு ரூபாய். 63080/- ஊராட்சியில் Receipt No. 384 & 385 நாள் 10-08-2024-ன் படி செலுத்தப்பட்டுள்ளது. எனவே பின்வரும் நிபந்தனைகளுடன் இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1) உறுப்பினர் செயலர் (பொறுப்பு) திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் ந.க.எண்: C475R34V/2024/TCP குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

2) மேற்படி கடிதத்துடன் வரப்பெற்ற கோப்பு ந.க.எண்: C475R34V/2024/TCP திலி மா.அ நாள். 01/04/2024 மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி செயல்பட வேண்டும்.

3) மனைப்பிரிவிற்கு Layout கட்டணம் செலுத்தியதில் வித்தியாச தொகை ஏதேனும் செலுத்த வேண்டியது பின்னர் அறியப்பட்டால் அதனை செலுத்த வேண்டும்.

4) நீதிமன்ற வழக்கு மற்றும் ஏதேனும் வில்லங்கம் இருப்பின் மனுதாரரை சார்ந்ததாகும்.

**இணைப்பு:**

1. நிபந்தனைக் கடித நகல்கள்
2. ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம்.

**பெறுநர்:**

தி.திலகவதி,க.பெ.திருமலை நயினார்

B-5, வீரபாகு நகர், பேட்டை, திருநெல்வேலி.

**நகல்:**

1.உறுப்பினர் செயலர் (பொறுப்பு)திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் திருநெல்வேலி.

2.உதவி இயக்குநர் நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம்.

3.வட்டாட்சியர் திருநெல்வேலி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

4.ஊராட்சி தலைவர் சுத்தமல்லி ஊராட்சி (வரைபடம்) 1.இணைப்பு